# குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம்
# திருப்பதிசாரம் - அஞ்சல்

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்

## பணிகள் பற்றிய வருட அறிக்கை - 2022

குமரி மாவட்ட ஊரக முன்னேற்ற சங்கம் கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளை தாலுகாவிற்குட்பட்ட திருப்பதிசாரம் கிராமத்தை தலைமையிடமாகக் கொண்டு கடந்த 38 வருடங்களாக பல்வேறு நலப்பணிகளை செய்து வருகிறது. இதில் ஆதரவற்ற ஊனமுற்றோர், முதியோர், மனநோயினால் பாதிக்கப்பட்டவர்கள், மனவளர்ச்சி குன்றியோர் ஆகியோர்கள் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் கீழ் 2022-ம் ஆண்டு செய்த பணிகள் பற்றிய விரிவான அறிக்கை சமர்ப்பிக்கபடுகிறது.

## திட்டத்தின் நோக்கம்:

ஊனமுற்றோர்களின் நலனில் அக்கரை கொண்டு அவர்களின் எதிர்கால வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுக்கவும், மனவளர்ச்சி குன்றியவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், ஆதரவற்ற முதியோர்களை பராமரிக்கவும், ஆதரவற்ற மனநோயினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மறுவாழ்வு கொடுத்து அவர்களும் சமுதாய மக்களோடு இணைந்து வாழ்வதற்கு வழிவகை செய்யும் நோக்கத்தோடு இத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 1. மேற்கொண்ட திட்டங்கள்:

1. **மனவளர்ச்சி குன்றியோருக்கான பள்ளி – (மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம்) –** திருப்பதிசாரம்.

2. **ஸ்பாஸ்டிக்ஸ் சென்டர் ஆப் கன்னியாகுமரி –** மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தங்கும் வசதியுடன் கூடிய தொழிற்பயிற்சி மையம் - புளியடி, நாகர்கோவில்.

3. **நல்ல சமாரியன் முதியோர் இல்லம் (பெண்கள்)** - ஆசாரிபள்ளம்.

4. **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் (பெண்கள்) –** ஈத்தங்காடு, வெள்ளிச்சந்தை.

5. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுத் திட்டம்.

6. வளமேம்பாட்டுத்திட்டம்.

ஆகிய திட்டங்களின் கீழ் செயல்படுத்தப்பட்ட பணிகள் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

## 2. மேற்கொண்ட பணிகள்:

1. ஆதரவற்றவர்களை சந்தித்தல்
2. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.
3. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்.
4. ஆதார், அடையாள அட்டை எடுக்க ஏற்பாடு செய்தல்.
5. நன்கொடையாளர்களை சந்தித்தல்.
6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்.
7. Case History எழுதுதல்.
8. நன்கொடைகள் வசூலித்தல்.
9. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்.
10. விழாக்கள் கொண்டாடுதல்.
11. பெற்றோர்/உறவினர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
12. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.
13. பணியாளர்கள் கூட்டங்கள் நடத்துதல்.
14. ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.

## 3. திட்டப்பணிகள் யார் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

திட்ட இயக்குனர், உதவி திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள், நிர்வாக பணியாளர்கள், விடுதி பணியாளர்கள் மற்றும் உதவி பணியாளர்கள் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## 4. செய்து முடித்த பணிகள்:

### 1. ஆதரவற்ற நபர்களை சந்தித்தல்:

இந்த ஆண்டு இயக்குனர், துணை இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள் மூலம் மொத்தம் ஆதரவற்ற நபர்களை சந்தித்து பேசப்பட்டுள்ளது.

### 2. நமது சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்:

இந்த ஆண்டு இயக்குனர், துணை இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள் மூலம் சிறப்பு இல்லங்களை

பார்வையிட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்தையும் பார்வையிட செல்லும் போது அந்த இல்லத்தின் பணிகளையும், பயனாளிகளையும் கவனிக்கப்பட்டுள்ளது. சிறப்பு இல்லங்களை பார்வையிட வந்த பார்வையாளர்களிடம் நமது திட்டத்தின் நோக்கம் பற்றியும், சிறப்பு இல்லங்களின் செயல்பாடுகள் பற்றியும், சிறப்பு இல்லங்களை நன்கொடையாளர்களின் உதவியுடன் நடத்துவது பற்றியும் கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஆதரவற்ற **மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்** முறையும், **'ஸ்பாஸ்டி' தொழிற்பயிற்சி மையம்** முறையும், **நல்ல சமாரியன் முதியோர் இல்லம்** முறையும், **அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்** முறையும் பார்வையிடப்பட்டுள்ளது.

**இந்த வருடம் தொழிற்பயிற்சி இல்லங்களை பார்வையிட்ட விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண். | சிறப்பு இல்லங்களை பார்வையிட்ட பணியாளர்கள் | பார்வையிட்ட சிறப்பு இல்லங்கள் | | | |
|---|---|---|---|---|---|
| | | **SMR** | **SPASTI** | **GSHA** | **ANBALAYA** |
| 1. | R. விக்டோரியா | | | | |
| 2. | J. ஸ்ரீகலா | | | | |
| 3. | C. விஜி | | | | |
| 4. | S. அமல சரோஜி | | | | |
| Total | | | | | |

## 3. நமது சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல்:

ஆதரவற்ற முதியோர், மனநிலை பாதிக்கப்பட்டவர், மனவளர்ச்சி குன்றியவர்களையும், சிறப்பு பயிற்சி, பராமரிப்பு தேவைப்படும் நபர்களையும், நமது சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு புதியதாக சிறப்பு இல்லங்களில் சேர்க்கப்பட்டவர்களின் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:

இந்த ஆண்டு செல்வி. சாரதா என்ற மாணவியை புதியதாக சேர்த்துக் கொள்ளப்பட்டது.

**‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சி குன்றிய – ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம்:**

இந்த ஆண்டு செல்வன். மதன், செல்வன். வினேஷ், செல்வன். லாலு, செல்வன். ரஞ்சித்குமார், செல்வன். ஆன்றணி, செல்வன். பாலாஜி, செல்வன். R. நாகராஜன், செல்வன். வைகுண்டம் ஆகிய 8 மாணவர்களை புதியதாகவும், தொடர் விடுப்பில் இருந்த செல்வன். சத்தியநாராயணன், செல்வன். செல்வகுமார் ஆகிய இருவரையும் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டது.





**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:**

இவ்வருடம் 10.02.2022 அன்று திருப்பதிசாரத்தை சேர்ந்த திருமதி. சொர்ணம் அவர்களையும், 10.03.2022 அன்று வெள்ளிச்சந்தை பகுதியில் ஆதரவின்றி சுற்றித்திரிந்த திருமதி. செல்லம்மா அவர்களையும், 19.05.2022 அன்று அன்பாலயா இல்லத்திலிருந்து திருமதி. மரிய குளோரிபாய், செல்வி. தேவகுமாரி, திருமதி. லிசி ஆகியோரையும், 25.06.2022 அன்று ஆசாரிபள்ளம் அரசு



மருத்துவமனை தயாகேந்திராவில் ஆதரவின்றி இருந்த திருமதி. ராஜேஸ்வரி அவர்களையும், 14.07.2022 அன்று அழகியபாண்டிபுரத்தை சேர்ந்த திருமதி. தாய் அவர்களையும், 24.07.2022 அன்று கோட்டார் ரயில் நிலையத்தில் ஆதரவின்றி இருந்த திருமதி. இட்டாபாய் அவர்களையும், 06.10.2022 அன்று அன்பு நகரில் ஆதரவின்றி இருந்த திருமதி. சிரோமணி அவர்களையும், 12.10.2022 அன்று பெரியவிளையில்




இருந்து திருமதி. கனகா ஆகிய மூன்று நபர்களையும் மாவட்ட சமூக நலத்துறை அதிகாரி திருமதி. சரோஜினி அவர்கள் பரிந்துரையின் படி இல்லத்தில் சேர்க்கப்பட்டது. 16.10.22 அன்று மண்டைக்காடு கோயில் வளாகத்தில் ஆதரவின்றி சுற்றித்திரிந்த



திருமதி. சின்னம்மா அவர்களையும் மண்டைக்காடு காவல் நிலைய அதிகாரிகளால் புதிய நபர்களாக இவ்வருடம் நமது இல்லத்தில் சேர்க்கப்பட்டது.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

14.01.2022 அன்று நித்திரவிளையைச் சேர்ந்த செல்வி. சுஜி என்பவரையும்,

08.02.2022 அன்று குருந்தன்கோடு பகுதியை சேர்ந்த திருமதி. சரோஜா என்பவரையும், 16.02.2022 அன்று மார்த்தாண்டம் ஆர்.சி தெருவில் ஆதரவற்ற நிலையில் தங்கியிருந்த திருமதி. மஞ்சு என்பவரை மார்த்தாண்டம் காவல் துறையினர் உதவியோடும், 20.02.2022 அன்று ஆளுரைச் சேர்ந்த திருமதி. விசாலாட்சி என்பவரையும்,



02.03.2022 அன்று கூட்டுமங்கலத்தை சேர்ந்த திருமதி. சுந்தரி என்பவரையும், 14.03.2022 அன்று சிறு வைகுண்டத்தை சேர்ந்த முன்னாள் பயனாளி செல்வி. இசக்கியம்மாவையும்,

02.04.2022 அன்று கன்னியாகுமரி கடற்கரையில் ஆதரவற்ற நிலையில் சுற்றிதிரிந்த திருமதி. அனிதா என்பவரை கன்னியாகுமரி காவல்துறையினர் உதவியோடும்,

04.05.2022 அன்று திருமதி. கலாராணி என்பவரையும், 06.05.2022 அன்று வில்லுகுறி பகுதியில் ஆதரவற்ற நிலையில் சுற்றி திரிந்த திருமதி. ராதா என்பவரை மாவட்ட சமூக நலதுறை அலுவலர் அவர்கள் உதவியோடும்,



06.08.2022 அன்று இராஜாக்கமங்கலத்தை சேர்ந்த திருமதி. சந்திரா தேவி என்பவரையும், 21.08.2022 அன்று மாடத்தட்டுவிளையைச் சேர்ந்த திருமதி. பெல்லார்மின் என்பவரையும், 31.08.2022 கடிய பட்டணத்தை சேர்ந்த செல்வி. பாக்கிய சீலி என்பவரையும்,



06.09.2022 அன்று ஆளுரைச் சேர்ந்த முன்னாள் பயனாளி திருமதி. விசாலாட்சி என்பவரையும்,



13.11.2022 அன்று ஆதரவற்ற நிலையில் சாலையோரத்தில் நின்று கொண்டிருந்த திருமதி. ஜெயலெட்சுமி என்பவரை மாவட்ட சமூக நலத்துறை அலுவலர் அவர்கள் உதவியோடும், 17.11.2022 அன்று ஆதரவற்ற நிலையில் இருந்த திருமதி. மேரி என்பவரை வழுக்கம்பாறை ஆலய அருட்சகோதரிகள் வாயிலாகவும், அன்பாலயா இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்தார்கள்.

**இவ்வருடம் நமது சிறப்பு இல்லங்களில் புதியதாக சேர்க்கப்பட்டவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | புதியதாக சேர்க்கப்பட்ட நபர்கள் |
|---|---|---|
| 1. | SMR | 1 பேர் |
| 2. | SPASTI | 10 பேர் |
| 3. | GSHA | 11 பேர் |
| 4. | ANBALAYA | 15 பேர் |
| Total | | 37 பேர் |

## 4. ஆதார் கார்டு எடுக்க ஏற்பாடு செய்தல்:

## 5. நன்கொடையாளர்களை சந்தித்தல்:

## 6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்:

### திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சிமையம்:

20.10.2022 அன்று கோட்டாறு அரசு ஆயுர்வேதா மருத்துவமனை மருத்துவ குழுவினரால் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டு மருந்து மாத்திரைகள் கொடுக்கப்பட்டது. 32 பேர் பயனடைந்தார்கள்.

## ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான தொழிற்பயிற்சி மையம்:

மருத்துவர் தேதி கொடுக்காததால் மருத்துவ முகாம்கள் நடைபெறவில்லை.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

### 1. Covid-19 தடுப்பூசி முகாம்:

11.01.2022 அன்று தொல்ல விளை அரசு ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் சார்பில் கொரோனா தடுப்பூசி இரண்டாவது தவணை தடுப்பூசி 6 நபருக்கு போடப்பட்டது.




### 2. பொது மருத்துவ முகாம்:




12.01.2022 அன்று தொல்லவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் சார்பில் பொது மருத்துவ முகாம் நடத்தி தேவைப்பட்டவர்களுக்கு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் 23 முதியோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

### 3. கண் மருத்துவ முகாம்:

18.03.2022 அன்று வெட்டூர்ணிமடம் பெஜான்சிங் கண் மருத்துவமனை மருத்துவ குழுவினரால் கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம் மருத்துவ முகாமில் 20 முதியோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.



## 4. **Covid-19 தடுப்பூசி முகாம்:**




10.07.2022 அன்று தொல்ல விளை அரசு ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் சார்பில் Booster Dose (ஊக்க மருந்து) போடப்பட்டது. இம்முகாமில் 21 பேர் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.

## 5. பொது மருத்துவ முகாம்:

31.07.2022 அன்று Kanyakumari Nurses Welfare Trust சார்பில் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. இம்முகாமில் 21 பேர் கலந்து கொண்டு பயனடைந்தார்கள்.




## 6. ஆயுர்வேதா மருத்துவ முகாம்:

கோட்டார் ஆயுர் வேதா மருத்துவ கல்லூரி மருத்துவமனை சார்பில் தேசிய ஆயுர்வேத தினத்தை முன்னிட்டு 20.10.2022 அன்று மருத்துவமுகாம் நடத்தப்பட்டு மருந்து, எண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டது. இம்முகாமில் 22 பேர் பயனடைந்தார்கள்.



## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:




18.03.2022 அன்று பெஜான்சிங் கண் மருத்துவமனை சார்பில் அன்பாலயா இல்லத்தில் கண் மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 52 பயனாளிகளுக்கு கண் பரிசோதனை செய்து மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

30.04.2022 அன்று முட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பாக நடமாடும் மருத்துவ சேவை மூலம் அன்பாலயா இல்ல பயனாளிகள் 44 நபருக்கு பரிசோதனை செய்யப்பட்டது. அதில் 16 நபருக்கு Blood Suger பரிசோதனை செய்ததில் 7 நபருக்கு Suger இருப்பதாக கூறி மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது.

22.09.2022 அன்று தக்கலை அரசு மருத்துவமனை மனநல மருத்துவர் Dr. ஈனோக் அவர்கள் அன்பாலயா பயனாளிகள் 51 நபர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்து தேவையான மாத்திரைகள் மாற்றி எழுதி கொடுக்கப்பட்டது.

20.10.2022 அன்று கோட்டார் அரசு ஆயுர் வேதா மருத்துவமனை மூலம் பொது மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 50 பயனாளிகள் பயனடைந்தனர்.

## இந்த ஆண்டு நடைபெற்ற மருத்துவ முகாம்கள் விபரம் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

| வ. எண். | சிறப்பு இல்லங்கள் | தேதி | நடைபெற்ற மருத்துவ முகாம்கள் | மருத்துவமுகாமில் கலந்து கொண்டவர்கள் |
|---|---|---|---|---|
| 1. | SMR | 20.10.2022 | பொது மருத்துவ முகாம் | 32 |
| 2. | SPASTI | - | - | - |
| 3. | GSHA | 11.01.2022<br>12.01.2022<br>18.03.2022<br>10.07.2022<br>31.07.2022<br>20.10.2022 | Covid -19 தடுப்பூசி முகம்<br>பொது மருத்துவ முகாம்<br>கண் மருத்துவமுகாம்<br>Covid-19 Booster Dose<br>பொது மருத்துவ முகாம்<br>ஆயுர்வேதா மருத்துவ முகாம் | 6<br>23<br>20<br>21<br>21<br>22 |

| 4. | ANBALAYA | 18.03.2022<br>30.04.2022<br>22.09.2022<br>20.10.2022 | கண் மருத்துவ முகாம்<br>Blood Sugar முகாம்<br>மனநல மருத்துவ முகாம்<br>ஆயுர்வேதா மருத்துவ முகாம் | 52<br>44<br>51<br>50 |
|---|---|---|---|---|

## 7. CASE HISTORY எழுதுதல்:

**SMR:**

-

**SPASTI:**

இந்த ஆண்டு புதியதாக சேர்க்கப்பட்ட 6 நபர்களுக்கு Case History எழுதப்பட்டுள்ளது.

**GSHA:**

**ANBALAYA:**

| வ.எண் | சிறப்பு இல்லங்கள் | Case History |
|---|---|---|
| 1. | SMR | |
| 2. | SPASTI | 6 |
| 3. | GSHA | |
| 4. | ANBALAYA | |

## 8. நன்கொடை வசூலித்தல்:

சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் பயனாளிகளுக்கு தேவையான உணவு, உடை, மற்றும் அவர்களுக்கு தேவையான அனைத்து பொருள்களும் உள்ளுர் நன்கொடையாளர்களிடம் பணமாகவும், பொருளாகவும் பெற்று நடத்தப்பட்டு வருகிறது.

**இந்த ஆண்டு நன்கொடை பெற்றதின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**
**மனவளர்ச்சி குன்றியோர் சிறப்பு இல்லம்:**

இந்த ஆண்டு ஒருநேர உணவாக 1104 நபர்களும், ஒருநாள் உணவாக 10 நபர்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள். நன்கொடையாக ரூ.93101/- கிடைத்துள்ளது.

**ஸ்பாஸ்டி:**

தொழிற்பயிற்சி இல்லத்திற்கு இந்த ஆண்டு ஒருநேர உணவாக 669 நபர்களும், ஒருநாள் உணவாக 22 நபர்களும் பணமாக ரூ. 95,600/-ம் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:**

இவ்வருடம் மொத்த நன்கொடையாக ரூ. 75,500/-ம், ஒருவேளை உணவாக 432 நபர்களும், மூன்றுவேளை உணவாக 6 நபரும் உணவு கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

**அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:**

இவ்வருடம் அன்பாலயா இல்லத்திற்கு ஒரு நேர உணவாகவும், பணமாகவும் 355 நபர்களும், நன்கொடையாக ரூபாய் 1,15,100/-ம் தந்து உதவி செய்துள்ளார்கள்.

**இந்த ஆண்டு உணவு மற்றும் பணம் நன்கொடை விபரம் இல்லங்கள் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | சிறப்பு இல்லங்கள் | ஒருநேர உணவாக வழங்கியவர்கள் | ஒருநாள் உணவாக வழங்கியவர்கள் | நன்கொடை Rs. |
|---|---|---|---|---|
| 1. | மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி இல்லம் - திருப்பதிசாரம் | 1104 | 10 | 93,101/- |
| 2. | ‘ஸ்பாஸ்டி’ மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி இல்லம்-புளியடி | 669 | 22 | 95,600/- |
| 3. | நல்ல சமாரியன் முதியோர் இல்லம் - ஆசாரிபள்ளம் | 432 | 6 | 75,500/- |
| 4. | அன்பாலயா மனநோயாளிகள் மறுவாழ்வு இல்லம். | 355 | - | 1,15,100/- |

## பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:

## மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற் பயிற்சி மையம் - திருப்பதிசாரம்.

04.01.2022 அன்று ஆரல்வாய்மொழியை சேர்ந்த திரு. முத்துக்குமார் அவர்கள் 10 நைட்டியும், 08.01.2022 அன்று HDB Finance Service Ltd. சார்பில் ஒரு தையல் இயந்திரமும், 8 பிளாஸ்டிக் செயரும், 27.01.2022 அன்று நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. சுந்தர் அவர்கள் Dress Materials-ம்,

14.02.2022 அன்று திட்டுவிளையை சேர்ந்த திருமதி. சுரேகா அவர்கள் 15 நைட்டியும்,

02.08.2022 அன்று அந்திரபுரத்தைச் சேர்ந்த திரு. பிரபு அவர்கள் 4 Tube light-ம்,

30.10.2022 அன்று திரு. N. முத்துக்குமார் அவர்கள் 10 நைட்டியும்,

02.11.2022 அன்று லாவண்யா டைல்ஸ் உரிமையாளர் துணிகளும்,

24.12.2022 அன்று மணவாளக்குறிச்சி Yellow Trust சார்பில் 45 நைட்டிகளும் வாங்கி கொடுத்து உதவிசெய்துள்ளார்கள்.

**<u>'ஸ்பாஸ்டி' மனவளர்ச்சிகுன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சி மையம் - புளியடி</u>**

**<u>பொருளாக கொடுத்து உதவி செய்தவர்கள்:</u>**

06.03.22 அன்று புத்தன்துறையை சேர்ந்த திரு. மேத்யூராஜ் அவர்கள் 40 செட் நிக்கர், T- சர்ட், டவ்வல்களும், 04.12.22 அன்று நிக்கர், சட்டை, நைட்டி, மற்றும் அரிசி, மளிகையும்,

05.04.22 அன்று மீனாட்சிபுரத்தை சேர்ந்த திரு. ஜெகதீஸ் அவர்கள் பெட்சீட் - 88-ம்,

23.08.22 அன்று மேலகலுங்கடியைச் சேர்ந்த திரு. ஐசக் அவர்கள் ஒரு டைனிங் டேபிளும், 10 பிளாஸ்டிக் செயரும், 27.08.22 அன்று கலுங்கடியை சேர்ந்த திரு. கிளாரன்ஸ் ஜாண் அவர்கள் 89 சர்ட்டும்,

28.09.22 அன்று திரு. விஜய் வசந்த் MP அவர்கள் பிளாஸ்டிக் பக்கெட் -10-ம், மக் -5-ம்,

22.10.22 அன்று கிருஷ்ணன்கோயிலை சேர்ந்த திரு. ரவி கிருஷ்ணன் அவர்கள் பெட்சீட்டும்,

23.11.22 அன்று நாகர்கோவிலைச் சேர்ந்த திரு. தினகரன் அவர்கள் 0.5 மோட்டார்-1, மிக்ஸி-1, பைப் 30 அடி, பெட்சீட் -90 ஆகியவையும், 03.12.22 அன்று சைமன்நகரைச் சேர்ந்த Dr. ஜாண்சுரேஷ் முத்தையா அவர்கள் 89 மாணவர்களுக்கும் நிக்கர், T-சர்ட்டும்,

23.12.22 அன்று ஹோலிகிராஸ் மருத்துவமனை பொறுப்பாளர் அருட்சகோதரி பிரின்சி அவர்கள் டவ்வல் மற்றும் சினேக்சும், 25.12.22 அன்று கோட்டாறு சவேரியார் ஆலயத்தில் வைத்து நடைபெற்ற ரயில்வே பணியாளர்களின் திருப்பலியில் நமது இல்லத்திற்கு ரூ.6000/- பெறுமான சமையல் பாத்திரங்களும், மேலும் பலர் அரிசி, மளிகை, சினேக்ஸ் போன்ற பொருள்களும் கொடுத்து உதவி செய்துள்ளார்கள்.

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம் - ஈத்தன்காடு.

பொருள்களாக 13.02.2022 அன்று சென்னையைச் சேர்ந்த திரு. அப்துல் கலாம் ஆஸாத் அவர்கள் 35 பிளாஸ்டிக் செயரும், புத்தளத்தைச் சேர்ந்த திருமதி. கேனல் அவர்கள் நைட்டியும், மாத்தூரைச் சேர்ந்த திருமதி. ரெத்தின பாய் அவர்கள் சாரி, சுடிதாரும், 02.04.22 அன்று மார்த்தாண்டம் RC ஆலயத்தின் Society of Vincent D Paul சபை வாயிலாக நைட்டியும், 13.08.22 அன்று திரு. கில்டன் அனுசியா அவர்கள் 5 Tube light set-ம், வாணியக்குடியைச் சேர்ந்த திருமதி. ஆன்சி டாலியா அவர்கள் Soap Box, Silver வாளி, Bible, Song





Book-ம் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள். மேலும் பலர் நைட்டி, டவ்வல், சாரி, அரிசி, மளிகை, சோப்பு, சீனி, தின்பண்டங்கள், பழங்கள் ஆகியவையும் வாங்கி தந்து உதவி செய்துள்ளார்கள்.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

பொருட்களாக Nighties, Inskirt, Sarees, Surf, Washing Soap, Body Soap, Oil, Biscuits, Snacks, Dettol, Provision Things, Rice, Plastic Chair, Mattress,





Gas Stove, Diapper, Towel, Bible, Grinder ஆகியவை பொருட் களாகவும் தந்து உதவி செய்தார்கள்.

## 9. விழிப்புணர்வு கருத்து கொடுத்தல்:

நமது சிறப்பு இல்லங்களை பார்வையிட வரும் தனிநபர்களுக்கும், குழுவாக, குடும்பமாக வருபவர்களுக்கும் நமது நிறுவனத்தைப் பற்றியும், நிறுவனத்தின் கீழ் செயல்படும் சிறப்பு இல்லங்கள் பற்றியும், சிறப்பு இல்லங்களில் தங்கியிருக்கும் பயனாளிகளை பராமரிக்கும் விதம் பற்றியும், உள்ளூர் நன்கொடையாளர்களிடம் உதவிகள் பெற்று நடத்துவது பற்றியும் கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. பார்வையிட வந்த குழுக்களில் சிலவற்றை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம் - திருப்பதிசாரம்:

12.01.2022 அன்று மெர்க்கண்டைல் வங்கி பணியாளர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்கும்,

08.02.2022 அன்று HDB சமூக சேவை நிறுவன குழுவினர்களுக்கும், 28.02.2022 அன்று WCC Social Service League குழுவினர்கள் பார்வையிட வந்திருந்தார்கள் அவர்களுக்கும்,

13.04.2022 அன்று வடசேரி புனித வியாகப்பர் ஆலய 5-வது அன்பிய உறுப்பினர்களுக்கும்,

26.11.2022 அன்று அரசு இஞ்சினியரிங் கல்லூரி கோணம் NSS மாணவர்களுக்கும்,

07.12.2022 அன்று மேல்மிடாலம் தொன்போஸ்கோ ஜெபக் குழுவினர்களுக்கும், 17.12.2022 அன்று நாகர்கோவில் புனித அன்னாள் சபையினர்களுக்கும், 29.12.2022 அன்று தோவாளை CSI கல்லூரி CSE மாணவர்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

### ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியோர் தொழிற்பிற்சி மையம்:

28.02.2022 அன்று WCC-யிலிருந்து Social Service league குழுவின் சார்பில் 5 மாணவிகள் பார்வையிட வந்தார்கள் அவர்களுக்கும்,

16.03.2022 அன்று மேல மணக்குடி 2-வது அன்பிய உறுப்பினர்களுக்கும், 20.03.22 அன்று ஆசாரிபள்ளம் புனித பனிமய அன்னை நண்பர்கள் இயக்க உறுப்பினர்களுக்கும், அன்றைய தினம் மணக்குடியிலிருந்து வந்த அன்பிய குழுவுக்கும், 28.03.22 அன்று இனையம் புத்தன்துறை புனித பிரான்சிஸ்கான் 3-ம்

சபை உறுப்பினர்களுக்கும், 31.03.22 அன்று பிலாவிளை புனித ஜார்ஜியார் சர்ச் பங்கு பேரவை உறுப்பினர்களுக்கும்,

02.04.22 அன்று கீழ ஆசாரிபள்ளம் 9-வது அன்பிய உறுப்பினர்களுக்கும், 03.04.22 அன்று செந்தரை புனித சேவியர் ஆலய பங்கு பேரவை உறுப்பினர்களுக்கும்,

28.08.22 அன்று குருசடி அன்னை தெரசா கிறிஸ்தவ தொழிலாளர் இயக்க உறுப்பினர்களுக்கும்,

25.09.22 அன்று பிலிப்ஸ்புரம் CSI சர்ச் YMF உறுப்பினர்களுக்கும், 27.09.22 அன்று குலசேகரம் ஸ்ரீராம கிருஷ்ணா நர்சிங் கல்லூரி 3-ம் ஆண்டு



மாணவிகளுக்கும், 09.10.22 அன்று பேரின்பபுரம் CSI சர்ச் The Womens Fellow Ship குழுவினருக்கும்,

20.11.22 அன்று பெரிய விளை கத்தோலிக்க சேவா சங்க உறுப்பினர்களுக்கும், 26.11.22 அன்று Govt. Eng. College, Konam, Nss மாணவர்களுக்கும்,

17.12.22 புனித தெரசாஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி - வழுக்கம்பாறை 11-ம் வகுப்பு மாணவர்களுக்கும், 23.12.22 அன்று The Rajas International School, Ozhuginasery +1, +2 மாணவர்களுக்கும் விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:</u>**

06.03.2022 அன்று களிமார் புனித ஜோசப் ஆலய மாணவர்களுக்கும், 11.03.22 அன்று முட்டம் மறைமாவட்டம் கிறிஸ்தவ வாழ்வு சமூகம் சார்பாக வந்த நபர்களுக்கும், 19.03.22 அன்று கோணங்காடு புனித அல்போன்சம்மாள் அன்பிய மக்களுக்கும், உண்ணாமலைக்கடை புனித சேவியர் ஆலய 6-வது அன்பிய மக்களுக்கும், 20.03.22 அன்று ஆசாரிபள்ளம் ஆலய புனித ஜெபமாலை மாதா 13-வது அன்பிய மக்களுக்கும், 21.03.22 அன்று முட்டம்



ஆலய 53-வது அன்பிய மக்களுக்கும், 25.03.2022 அன்று கடியபட்டணம் கிறிஸ்தவ வாழ்வு சமூக மக்களுக்கும், 26.03.22 அன்று மார்த்தாண்டம் திரு இருதய ஆலய 5-வது அன்பிய மக்களுக்கும், சரல் பக்த சபை மக்களுக்கும், 29.03.22 அன்று சடையால்புதூர் ஆலய பிரான்சிஸ்கான் 3-வது சபை மக்களுக்கும்,

02.04.22 அன்று சடையால்புதூர் கிறிஸ்து அரசர் ஆலயம் கிறிஸ்தவர்களின் சகாய மரியாயின் சேனை மக்களுக்கும், மார்த்தாண்டம் ஆலய வின்சென்ட் தே



பால் சபை மக்களுக்கும், சரல் புனித செபஸ்தியார் 11-வது அன்பிய மக்களுக்கும், மார்த்தாண்டம் பெண்கள் மீனவ பேரவை மக்களுக்கும், 26.08.22 அன்று மார்த்தாண்டம் CSI நர்சிங் கல்லூரியின் 3-ம் ஆண்டு மாணவ, மாணவிகள், ஆசிரியர்களுக்கும், கொட்டில்பாடு புனித அலெக்ஸ் ஆலய இளையோர்களுக்கும், தெருவுக்கடை தூய ஆரோக்கிய அன்னை இளைஞர்களுக்கும், அப்பட்டு விளை புனித ஜோசப் ஆலய பங்கு பேரவை மக்களுக்கும்,

மேலும் உணவுகள் வழங்க வந்த நபர்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும், நமது **'கார்டு'** நிறுவனத்தை பற்றியும், கார்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும் சிறப்பு இல்லங்கள் பற்றியும், அவர்களை இல்லங்களில் சேர்த்துக் கொள்வது பற்றியும், அவர்களை பராமரிப்பது பற்றியும், அவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்வது பற்றியும் கருத்துக்கள் கொடுக்கப்பட்டது.

## <u>நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:</u>

இல்லங்களை பார்வையிட வரும் சமுதாய மக்களிடம் நமது **'கார்டு'** நிறுவனத்தின் பணிகளை பற்றியும் இந்நிறுவனத்தின் கீழ் செயல்படும் கிளை நிறுவனங்களை குறித்தும் முதியோர்களை பராமரிப்பது, அவர்களுக்கு சுகவீனம்

ஏற்படும் போது அவர்களை கவனிப்பது பற்றியும், அதனால் சந்திக்கும்





பிரச்சனைகளையும், முதியோர்களின் தேவைகளையும் எந்த சூழ்நிலையில் உள்ளவர்களை நமது இல்லத்தில் சேர்த்துக்கொள்கிறோம் அவர்களை எவ்வாறு பராமரிக்கிறோம் என்பது பற்றியும், நமது இல்லம் முற்றிலும் சமுதாய மக்களின் பங்களிப்போடு தான் இந்த பணிகளை மேற்கொண்டு வருகிறது என்னும் கருத்துக்கள் கூறப்படுகின்றது.

## 10. விழாக்கள் கொண்டாடுதல்:

### மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையம்:

**மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான சிறப்பு இல்லத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 01.01.2022 | புதுவருட விழா |
| 2.<br>3. | 15.01.2022<br>26.01.2022 | பொங்கல் விழா<br>குடியரசு தின விழா |
| 4. | 15.08.2022 | சுதந்திர தினம் |
| 5. | 04.10.2022 | சரஸ்வதி பூஜை |
| 6.<br>7. | 06.10.2022<br>24.10.2022 | திருக்கார்த்திகை தீப விழா<br>தீபாவளி |
| 8. | 14.11.2022 | குழந்தைகள் தினவிழா |
| 9. | 16.12.2022 | கிறிஸ்மஸ் விழா |

ஆகிய விழாக்கள் கொண்டாடப்பட்டுள்ளது.

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:



1. **<u>பொங்கல் விழா:</u>**

14.01.2022 அன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. மாணவர்கள் புத்தாடை அணிந்து பொங்கலிட்டு மகிழ்ந்தார்கள்.

**<u>2. குடியரசு தின விழா:</u>**

26.01.2022 அன்று குடியரசு தினவிழா கொடியேற்றப்பட்டு இனிப்பு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

**<u>3. தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழா:</u>**

27.05.2022 அன்று ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. மாணவர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டது. மாலை பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் மற்ற






அனைத்து மாணவர்களுக்கும் நினைவு பரிசும் வழங்கப் பட்டது. மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக நாகர்கோவில் வானொலி நிலைய மேலாளர் திரு. வடலூர் வாசகர் அவர்களும், கலுங்கடி Welfare Trust தலைவர் மற்றும் செயலாளரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**4. சுதந்திர தின விழா:**

15-08-2022 அன்று சுதந்திர தினவிழா கொண்டாடப்பட்டது. புளியடி அரசு தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. ஷீலா அவர்கள் கலந்து கொண்டு தேசிய கொடியினை ஏற்றி வைத்து வாழ்த்துரை மற்றும் இனிப்பு வழங்கி சிறப்பித்தார்கள்.

**5. சரஸ்வதி பூஜை:**

04-10-2022 அன்று சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது.

**6. திருக்கார்த்திகை தீப விழா:**

06-12-2022 அன்று திருக்கார்த்திகை அன்று கார்த்திகை தீபம் ஏற்றி கொண்டாடப்பட்டது.

7. **கிறிஸ்மஸ் விழா:** 11-12-2022 அன்று கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. பிலிப்ஸ்புரம் CSI சர்ச் பாஸ்டர் சைரஸ் அவர்களும், Young Mens Fellow Ship உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.




**ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான பயிற்சி மையத்தில் இந்த ஆண்டு கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14.01.2022<br>26.01.2022 | பொங்கல் விழா<br>குடியரசு தினவிழா |
| 2. | 27.05.2022 | தொழிற்பயிற்சி மைய ஆண்டு விழா |
| 3. | 15.08.2022 | சுதந்திர தினவிழா |
| 4. | 04.10.2022 | சரஸ்வதி பூஜை விழா |
| 5. | 06.12.2022 | திருக்கார்த்திகை தீப விழா |
| 6. | 11.12.2022 | கிறிஸ்மஸ் விழா |

## நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

### 1. பொங்கல் விழா:



14.01.2022 அன்று முதியோர் இல்ல வாசலில் முதியோர்களால் சேர்ந்து பொங்கலிட்டு பொங்கல் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### 2. முதியோர் தினவிழா:



01.10.2022 அன்று உலக முதியோர் தினத்தை முன்னிட்டு நாகர்கோவில் மாநகராட்சி சுகாதார துறை ஆய்வாளர் திரு. ராஜேஷ் அவர்கள் தலைமையில் முதியோர் தினவிழா கொண்டாடப்பட்டது. முதியோருக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

### 3. சரஸ்வதி பூஜை:



04.10.22 அன்று சரஸ்வதி பூஜையை முன்னிட்டு முதியோர்களுடன் சேர்ந்து பூஜை வைத்து சிறப்பாக கொண்டாடப்பட்டது.

### 4. தீபாவளி திருநாள்:




24.10.2022 தீபாவளி தினத்தன்று முதியோர் களுக்கு கிருஷ்ணன்கோயில் ஆதிபராசக்தி கோயில் சார்பில் காலை உணவு மற்றும் இனிப்புகள் வழங்கியும், உதவி திட்ட இயக்குனர் திரு. ஸ்டேன்லி அவர்கள் தலைமையில் மத்தாப்பு கொழுத்தியும், தீபாவளி பண்டிகை சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## 5. இல்ல ஆண்டு விழா:




05.11.2022 அன்று காலை 11.00 மணியளவில் நல்ல சமாரியன் முதியோர் இல்ல ஆண்டு விழா மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. சரோஜினி அவர்கள் தலைமையில் முதியோர்களின் கலை நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.



## 6. திருக்கார்த்திகை தீப விழா:



06.12.2022 அன்று மாலை 06.00 மணியளவில் முதியோர்களால் கார்த்திகை தீபம் ஏற்றி தீபவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.



## 7. கிறிஸ்மஸ் விழா:

06.12.2022 அன்று காலை 11.00 மணியளவில் முதியோர் இல்லத்தில்





வைத்து திருமதி. தீபா சோம்நாத், அருட்சகோதரி விஜி ஜாண் ஆகியோர் தலைமையில் கிறிஸ்மஸ் தாத்தா ஆடல் பாடலுடன் கேக் வெட்டி, சிறப்பு பரிசுகள் வழங்கி கிறிஸ்மஸ் விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் கொண்டாடப்பட்ட விழாக்கள் விபரம்:

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14-01-2022 | பொங்கல் விழா |
| 2. | 01-10-2022<br>04.10.2022<br>24.10.2022 | முதியோர் தினவிழா<br>சரஸ்வதி பூஜை விழா<br>தீபாவளி |
| 3. | 05-11-2022 | இல்ல ஆண்டு விழா |
| 4. | 06-12-2022 | கார்த்திகை தீபத்திருநாள் |
| 5. | 06-12-2022 | கிறிஸ்மஸ் விழா |

## அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

14.01.22 அன்று காலை 9.00 மணிக்கு அன்பாலயா பயனாளிகள் புத்தாடை அணிந்து பொங்கல் வைத்து கொண்டாடினர்.

26.01.2022 அன்று காலை 9.00 மணிக்கு உதவி திட்ட அலுவலர் திருமதி. விஜி அவர்கள் தேசிய கொடியேற்றி இனிப்புகள் வழங்கி குடியரசு தினவிழா கொண்டாடப்பட்டது.

06.03.2022 அன்று காலை 11.00 மணிக்கு அன்பாலயா இல்லத்தில்




பெண்கள் தினவிழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் கடியபட்டணம் மீனவ பேரவை தலைவர் திருமதி. லீமாரோஸ் அவர்களும், வெள்ளிச்சந்தை அஞ்சல்துறை அலுவலர் திருமதி. சிவஞான செல்வி அவர்களும், சரல் புனித பேதுரு கான்வென்ட் அருட்சகோதரி உபனேஷ்,

அருட் சகோதரி மோனிஷா அவர்களும், வில்லுகுறி சிறுமலர் கிரானைட் மார்பிள்ஸ் உரிமையாளர் திருமதி. பரிமளாகுமாரி அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள். இடைஇடையே பயனாளிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.

13.08.2022 அன்று மாலை 3.30 மணிக்கு அன்பாலயா இல்லத்தில் திட்ட இயக்குநர் அவர்கள் தலைமையில் ஆண்டுவிழா பொதுக்கூட்டம் ஆரம்பமானது.




இவ் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக ஈத்தங்காட்டை சேர்ந்த Dr. மாரச்சான் அவர்களும், கொடுப்பைக் குழியைச் சேர்ந்த Advocate திரு. J.P மோரிஸ் அவர்களும் இலந்த விளையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை திருமதி. குளோரி அவர்களும், மாடத்தட்டுவிளையை சேர்ந்த செல்வி. அல்போன்சாள் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கி விளையாட்டு போட்டியில்




வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கி சிறப்பித்தார்கள். இடைஇடையே பயனாளிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றது.



15.08.2022 அன்று காலை 9.00 மணிக்கு அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. உதவி திட்ட அலுவலர் திருமதி. விஜி அவர்கள் தேசிய கொடியேற்றினார்கள். பயனாளிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

04.10.2022 அன்று மாலை 4.00 மணிக்கு சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட்டது.

24.10.2022 அன்று Green Heart Group மூலமாக தீபாவளி கொண்டாடப்பட்டது. அன்பாலயா இல்ல பயனாளிகளுக்கு போட்டிகள்

வைத்து பரிசுகள் வழங்கி பட்டாசுகள் கொழுத்தியும், இனிப்புகள் வழங்கி சிறப்பித்து தந்தார்கள்.

21.12.2022 அன்று காலை 11.00 மணிக்கு அன்பாலயா இல்லத்தில் கிறிஸ்மஸ் விழா கொண்டாடப்பட்டது. சிறப்பு விருந்தினராக சரல் புனித பேதுரு பவுல் ஆலய பங்குதந்தை Rev. Fr. ஜாண் சிபி அவர்களும், காட்டுவிளை ரெஜினால்டு மெட்ரிக்குலேசன்




பள்ளி தாளாளர் செல்வி. அந்தோணியம்மாள் அவர்களும், அருட்சகோதரி. ஜேசுதங்கம் அவர்களும் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கியும், கிறிஸ்மஸ் கேக் வெட்டியும், சிறப்பு பரிசுகள் வழங்கியும் சிறப்பித்தார்கள். இடைஇடையே பயனாளிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றது.




**<u>அன்பாலயா மனநோயாளிகள் இல்லத்தில் நடைபெற்ற விழாக்கள் தேதி வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.</u>**

| வ. எண் | விழாக்கள் நடைபெற்ற நாட்கள் | கொண்டாடப்பட்ட விழாக்கள் |
|---|---|---|
| 1. | 14.01.2022<br>26-01-2022 | பொங்கல் விழா<br>குடியரசு தின விழா |
| 2. | 06.03.2022 | பெண்கள் தின விழா |
| 3. | 13.08.2022 | ஆண்டு விழா |
| 4. | 15-08-2022 | சுதந்திர தினவிழா |
| 4. | 04.10.2022 | சரஸ்வதி பூஜை |
| 5. | 24-10-2022 | தீபாவளி |
| 6. | 21.12.2022 | கிறிஸ்மஸ் விழா |

## 11. பெற்றோர்/ உறவினர் கூட்டம் நடத்துதல்:

### மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சி மையம்:

### ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையம்:

இந்த ஆண்டு 27.02.2022 அன்று 'ஸ்பாஸ்டி' மாணவர்களின் பெற்றோர்/ உறவினர் கூட்டம் நடைபெற்றுள்ளது. 17 மாணவர்களின் பெற்றோர்/உறவினர்கள் கலந்து கொண்டார்கள்.

26.06.2022 அன்று 'ஸ்பாஸ்டி' மாணவர்களின் பெற்றோர்/ உறவினர் கூட்டம் நடைபெற்றுள்ளது. கூட்டத்தில் 13 பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

16.10.2022 அன்று ஸ்பாஸ்டி மாணவர்களின் பெற்றோர்/ உறவினர் கூட்டம் நடைபெற்றுள்ளது. 20 மாணவர்களின் பெற்றோர்/உறவினர்கள் கலந்து கொண்டார்கள்.

### அன்பாலயா மனநோயாளிகள் இல்லம்:

மூன்று பெற்றோர்/உறவினர் கூட்டம் நடத்தப்பட்டது.

19.02.22 - 7 நபர்கள் கலந்து கொண்டனர்.

20.06.22 - 11 நபர்கள் கலந்து கொண்டனர்.

20.11.22 - 11 நபர்கள் கலந்து கொண்டனர்.

**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்களும், கலந்துகொண்ட பெற்றோர் விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர்கள் | நடைபெற்ற பெற்றோர் மற்றும் உறவினர் கூட்டங்கள் | கலந்து கொண்ட பெற்றோர்கள் |
|---|---|---|---|
| 1. | SMR | | |
| 2. | SPASTI | 1 | 19 |
| 3. | ANBALAYA | 2 | 16 |
| | மொத்தம் | 4 | 43 |

## 12. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்:

ஒவ்வொரு இல்லத்திலும் தங்கியிருக்கும் பயனாளிகளுக்கு உடல்நலக்குறைவு ஏற்படும்பொழுது உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவரின் ஆலோசனை படி அவர்களுக்கு மருந்து மாத்திரைகளும் மருத்துவ பரிசோதனைகளும், தகுந்த உணவுகளும் உரிய நேரத்தில் கொடுக்கப்பட்டு கவனிக்கப்பட்டுள்ளது.

### மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி இல்லம்:

### ஸ்பாஸ்டி மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான தொழிற்பயிற்சி மையம்

மாணவர்களுக்கு தினமும் கொடுத்து வரும் மாத்திரைகள் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு சென்று மாதந்தோறும் வாங்கி கொடுக்கப்படுகிறது. மற்றும் உடல்நலக்குறைவு ஏற்பட்ட செல்வன். ஜெயசிங், செல்வன். அபிசாந், செல்வன். ஹெஜோ ஜாண் சுமன், செல்வன். மணி, செல்வன். மகேஷ், செல்வன். கண்ணன், செல்வன். வேல்முருகன், செல்வன். பாலாஜி ஆகியோர்களை மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருந்து வாங்கப்பட்டது.

16.04.22, 17.09.22 ஆகிய நாட்களில் கிருமி மருந்து கொடுக்கப்பட்டுள்ளது.

### அன்பாலயா:

பயனாளிகளுக்கு சுகவீனங்கள் ஏற்படும் போது அவர்களின் நோய்களின் தன்மைக்கேற்ப Dr. மாரச்சான், Dr. மைக்கேல் மற்றும் வெள்ளிச்சந்தை ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ஆகியோரிடம் அழைத்து சென்று மருந்துகள் வாங்கி கொடுக்கப்பட்டது.

மாதந்தோறும் இஞ்சிச்சாறு கொடுக்கப்பட்டது. மாதந்தோறும் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் மனநோய்க்கான மாத்திரைகள் வாங்கி கொடுக்கப்பட்டது.

### நல்ல சமாரியன் முதியோர் இல்லம்:

முதியோர்களுக்கு சுகவீனம் ஏற்படும் எந்த நேரத்திலும் உடனடியாக அருகில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவரின்

ஆலோசனைப்படி அவர்களுக்கு மருந்து மாத்திரைகள், மருத்துவ பரிசோதனைகளும், தகுந்த உணவுகளும் உரிய நேரத்தில் அளிக்கப்பட்டு வருகின்றது.

## 13. பணியாளர்கள் கூட்டம் நடத்துதல்:

பணியாளர்கள் பணிகளை திட்டமிட்டு செய்வதற்கும் செய்த பணிகளை பற்றிய நிறை குறைகளை கலந்து பேசி குறைகளை நிவிர்த்தி செய்து பணிகளை செவ்வனே செய்ய வேண்டி பணியாளர்கள் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற பணியாளர்கள் கூட்டம் பற்றி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு திருப்பதிசாரம் மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான தொழிற்பயிற்சி மையத்தில் இரண்டு பணியாளர் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆண்டு ஸ்பாஸ்டி தொழிற்பயிற்சி மையத்தில் 18 பணியாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

ஓவ்வொரு மாதமும் நல்ல சமாரியன் முதியோர் இல்லத்தில் வைத்து இல்லப்பணியாளர்கள் கூட்டம் நடைபெற்று வருகின்றது.



முதியோர்களை பராமரிப்பது, அவர்களின் தேவைகளை எப்படி நிவர்த்தி செய்வது, சுகவீன நேரத்தில் தேவைப்படும் மருத்துவ சிகிட்சை குறித்தும், இல்லத்தில் பார்வையிட வரும் சமுதாய மக்களிடம் முதியோர்களைப் பற்றிய விபரங்களை எடுத்து கூறுவது மற்றும் செய்து முடித்த பணிகள், அடுத்து செய்ய போகும் பணிகள் இவற்றை பிற பணியாளர்களுடன் பகிர்ந்து கொள்ளுதல் ஆகியவை இக்கூட்டத்தில் பேசப்படுகின்றது.

இவ்வருடம் அன்பாலயா இல்லத்தில் 5 பணியாளர் கூட்டம் நடத்தப்பட்டது.

மேலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பணியாளர்களுக்கான கலந்தாய்வு கூட்டமும் நடத்தப்பட்டது.

**இவ்வருடம் இல்லங்கள் வாரியாக நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் பற்றிய விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.**

| வ.எண் | சிறப்பு இல்லங்களின் பெயர் | நடைபெற்ற பணியாளர் கூட்டங்கள் |
|---|---|---|
| 1. | SMR | 2 |
| 2. | SPASTI | 18 |
| 3. | GSHA | 12 |
| 4. | ANBALAYA | 5 |
| மொத்தம் | | 37 |

## 13. ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்:

ஒவ்வொரு திட்டத்தின் பொறுப்பாளர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் தங்கள் திட்டத்தின் கீழ் திட்டமிட்ட பணிகளை செய்து முடிக்கப்பட்டதைப்




பற்றி கலந்து பேசவும், அடுத்த மாதம் செய்ய வேண்டிய பணிகளை திட்டமிடவும் வேண்டி மாதந்தோறும் முதல் சனிக்கிழமைகளில் ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது. இந்த ஆண்டு ஆறு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் நடைபெற்றுள்ளது.

## 5. செய்து முடிக்காத பணிகள்:

---

## 6. திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்தவர்கள்:

திட்ட பணிகளை செய்து முடிக்க திட்ட இயக்குனர், உதவி திட்ட இயக்குனர், திட்ட அலுவலர், உதவி திட்ட அலுவலர்கள்,

ஒருங்கிணைப்பாளர்கள், நிர்வாக பணியாளர்கள் மற்றும் உதவி பணியாளர்களும் திட்ட பணிகளை செய்து முடிக்க உதவியாக இருந்துள்ளார்கள்.

## 7. எதிர்கால திட்டங்கள்:

1. சிறப்பு இல்லங்களில் புதிய நபர்களை சேர்த்தல் மற்றும் கவனித்தல்.
2. தொழிற்பயிற்சி, கலைநிகழ்ச்சி, யோகா பயிற்சி, விளையாட்டு பயிற்சி அளித்தல்.
3. சுத்தம் பராமரித்தல்.
4. விழாக்கள் கொண்டாடுதல்.
5. பெற்றோர்/உறவினர் கூட்டங்கள் நடத்துதல்.
6. மருத்துவ முகாம்கள் நடத்துதல்.
7. மருத்துவ வசதி செய்து கொடுத்தல்.
8. விழிப்புணர்வு கருத்துக்கள் கொடுத்தல்.
9. பணியாளர் கூட்டம், பணி மதிப்பீடு, ஒருங்கிணைப்பாளர் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல்.
10. நன்கொடைகள் வசூலித்தல்.
11. சுற்றுலா அழைத்துச் செல்லுதல்.
12. பணியாளர்களுக்கு பயிற்சி கொடுத்தல்.
13. ஆதார் கார்டு, ஊனமுற்றோர் அடையாள அட்டை வாங்குதல்.
14. CASE HISTORY எழுதுதல்.
15. அலுவலக பணிகள் மேற்கொள்ளுதல்
16. அலுவலக பராமரிப்பு/மராமத்து பணிகள் கவனித்தல்.
17. அலுவலக/ இல்ல பொருள்கள் விபரப்பட்டியல் சரிபார்த்தல்.
18. சான்றிதழ்கள் புதுப்பித்தல்.
19. புதிய திட்டங்கள்/ தேவைகளுக்காக நன்கொடையாளர்களிடம் மனு கொடுத்தல்.
20. இல்லங்களுக்கு தேவையான பொருள்களை அனுப்பி கொடுத்தல்.
21. பிற சிறப்பு இல்லங்களை பார்வையிடுதல்.

| Signature | Signature | Signature | Signature |
|---|---|---|---|
| (Miss. Victoria) | (Mrs. Viji) | (Mrs. Sreekala) | (Miss. Amala Saroji) |

Thirupathisaram,
03.02.2023.

Director. Asst. Director.